**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் தேதி வாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3ம்வாதி ஆஜர்.1,3 முதல் 8 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 1 முதல் 3,8பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் மற்றும் 4 முதல்7 பிரதிவாதிகள் வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.1 தர்மலிங்கம் த/பெ.மாரப்பகவுண்டர்

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணைதொடர்ச்சி:–</u>**

1. பி.வா.சா.4 ஆவணத்தில் உள்ள கருப்பண்ணகவுண்டர் கையொப்பம் பக்கத்திற்கு பக்கம் மாறுபடுகிறது என்றால் சரியல்ல. வாதி தன்னுடைய பதில் உரையில் கருப்பண்ணகவுண்டர் கையொப்பம் பி.வா.சா.4 ஆவணத்தில் உள்ளது இல்லை என்று சொல்லியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி தரப்பில் என்ன எழுதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற முழுவிவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மீண்டும் சாட்சி சரியல்ல என்று கூறினார்.

2. நான் மேற்படி பி.வா.சா.4 ஆவணத்தில் உள்ள கருப்பண்ணகவுண்டர் கையொப்பம் மற்றும் கைரேகை நிபுணர்ருக்கு அனுப்பி பரிசோதித்ததால் கருப்பண்ணகவுண்டர் கையொப்பம் மற்றும் கைரேகை இல்லை என்பது தெரியவரும் என்பதால் நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் தேவைப்பட்டால் நிபுணருக்கு அனுப்பி கொள்ளலாம். 7 மற்றும் 8 பிரதிவாதிகளுக்க வழக்கு நிலுவையில் உள்ள எழுதப்பட்ட வா.சா.20 மற்றும் வா.சா.21 அரசு வழிகாட்டு மதிப்பின்படி எழுதப்பட்டது என்றால் சரிதான்.

3. சந்தை மதிப்பு வேறு, வழிகாட்டு மதிப்பு வேறு என்று சொன்னால் எனக்கு தெரியாது. வா.சா.20,வா.சா.21 ஆவணங்களில் பணமாறிமாற்றங்கள் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்களில் வாதிகள் கையொப்பம்மிடவில்லை என்பதால் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமையில்லை என்று நான் சொல்லுகிறேன் என்றால் சரிதான்.

4. பி.வா.சா.1 ஆவணத்தின் படி ராமயம்மாள் சொத்து பாத்தியத்தை இழக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்டுள்ள செக்குபந்தி சர்வே எண் ஆகியவைகள் சரியானது என்றால் சரிதான். மீண்டும் சாட்சி பிராதை பார்த்தால்தான் கூறயியலும் என்று கூறினார். பி.வா.சா.17 ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் பி.வா.சா.17 ஆவணத்தை படித்து பார்த்து தான் சொல்ல இயலும். வாதிகள் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5. வாதிகளுக்கு பாகம் கிடைக்க கூடாது என்பதற்காக போலியான ஆவணம் தயார் செய்து மேலும் பொய்யாக எதிர் வாதம் செய்து நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:–

1. நானும் 3,4,5 பிரதிவாதிகள் சேர்ந்து 16.03.2022ல் ரீ.ச.எண்.328/3 1 ஏக்கர் 77 செண்ட் பூமி,கிணறு ஆகியவை சேர்த்து 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட தேதியில் இருந்து 8ம் பிரதிவாதி சுவாதீணத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி தகுந்த பிரதிபிரசோனத்தின் பெயரில் தான் என்னிடம் கிரையம்பெற்றார்.

2. 8ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை தவிர வேறு சொத்துக்கள் பொதுவாக உள்ளது என்றால் எனக்கு உள்ளது. 8ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு பாதிப்பு ஏற்பட்டால் நான் தான் பொறுப்பு என்றால் சரிதான்.